https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

07TH APRIL 2024 WWW.PUTHUSUDAR.LK SUNDAY ISSUE: 74

# இரண்டு தேர்தல்களும் ஒரே நேரத்தில்

## ஆளுங்கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் விரைவில் யோசனை

எந்தத் தேர்தலை முதலில் நடத்துதல் என்ற விவகாரம் தொடர்பில் மொட்டு கட்சிக்கும் ஜனாதிபதிக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்றொரு யோசனையை மொட்டு கட்சி எம்பிக்கள் சிலர் ஜனாதிபதியிடம் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துதல் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளார். அமைச்சரவைக்கும் தகவல் கொடுத்துள்ளார்.

ஆனால்,நாடாளுமன்றத் தேர்தலையே முதலில் நடத்த வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கிறார் பசில் ராஜபக்ச.

இதனால் ஜனாதிபதிக்கும் மொட்டு கட்சிக்குமிடையில்

02 ➤

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம்

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்கள் நிறைவடையும் இத்தருணத்தில் பிரதான எதிர்கட்சியின் யோசனைக்கு அமைய அந்தத் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் ஒன்றை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதம் இந்த மாதம் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் இடம்பெறவுள்ளன.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவின் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற வர்த்தக குழு கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

## தேர்தல் முறைமை திருத்தம் புதிய நாடாளுமன்றில்

தேர்தல் முறைமையைத் திருத்தும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்படாது என்றும் புதிய நாடாளுமன்றிலேயே அது முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் மனோ கணேசன் எம்பியிடம் கூறியுள்ளனர்.

கடந்த வாரம் மனோ கணேசன் ஜனாதிபதியையும் நீதி அமைச்சரையும் சந்தித்து பேசினார்.அப்போது தேர்தல் திருத்தம் தொடர்பில் மனோ அவர்களிடம் விசாரித்தார். அப்போதே இருவரும் மேற்படி உறுதி மொழியை மனோவுக்கு வழங்கினர்.



## எந்தத் தேர்தல் முதலில்?

### ஜனாதிபதி மக்களுக்கு அறிவிக்க வேண்டும்

முதலில் எந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று ஜேவிபி உறுப்பினரும் முன்னாள் எம்பியுமான லால் காந்த கூறியுள்ளார்.

அரசாங்கம் எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்று கூறாமல் அமைதியாக இருப்பதன் மூலம் அரசின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.அரசு

02 ➤

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன






உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 APRIL 07 - SUNDAY

# மைத்திரியின் கெட்ட காலம்

இலங்கையின் ஜனாதிபதிகளில் கிறுக்குத்தனமாக முடிவெடுக்கின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனதான்.அவர் ஜனாதிபதி பதவியில் இல்லாத நிலையிலும்கூட அதையே செய்கிறார்.

நல்லாட்சியின்போது ரணிலும் மைத்திரியும் இணைந்து ஆரம்பத்தில் நன்றாகவே ஆட்சி செய்யத் தொடங்கினர்.

பின்னர் இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்படத் தொடங்கியதும் ரணிலுக்கு எதிராக சில கிறுக்குத்தனமான வேலைகளில் இறங்கத் தொடங்கினார்.

அதில் முக்கியமானதுதான் யாருமே எதிர்பார்த்திராத தருணத்தில் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து தூக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக நியமித்தமை.

அப்போது கீரியும் பாம்புமாக இருந்த மஹிந்தவும் மைத்திரியும் ஒன்றுசேருவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மைத்திரி ஜனாதிபதியானதும் மஹிந்தவிடம் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவப் பதவியைக்கூட பறித்திருந்தார்.இதனால் இருவருக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரித்தது.இதனால் அவர்கள் இணைவதென்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.

ஆனால்,ரணிலுடன் முரண்பட்டுக்கொண்டதால் –அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்காக யாருடனும் கூட்டுச் சேர்வார் என்று யாரும் நம்பவில்லை.

அப்படி யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில்தான் ரணிலை நீக்கிவிட்டு மஹிந்தவைப் பிரதமராக்கினார். அவர் எடுத்த அந்த முடிவு அவருக்கு அவப்பெயரையே பெற்றுக்கொடுத்தது.

அதன்பின் அவர் மொட்டு கட்சியுடன் இணைந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவருக்கு அந்தக் கட்சிக்குள் மதிப்புக் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்தும் அவரது செயற்பாடுகள் எந்தவொரு முன் அறிவித்தாலும் இல்லாத–சற்றுகூட ஊகிக்க முடியாத கிறுக்குத்தனமாகவே இருந்தன.

அதில் ஒன்றுதான் அவர் தயாசிறி ஜயசேகரவை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கியமை. அதுவும் அவருக்கு நல்ல பெயரை ஈட்டிக்கொடுக்கவில்லை.

அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மீண்டும் அவரை அழைத்து பிரதி சிரேஷ்ட உப தலைவர் பதவி தருகிறேன் என்று கூறினார்.தயாசிறி அதை ஏற்கவில்லை.

அதனைத் தொடர்ந்து துமிந்த திஸாநாயக்க,லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரையும் அவர்கள் வகித்து வந்த கட்சி பதவிகளில் இருந்து நீக்கினார்.

அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.இப்போது மைத்திரி கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை ஒன்றை விதித்துள்ளது.

மைத்திரியை முற்றாக நீக்கிவிட்டு சந்திரிகாவை கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு மைத்திரியின் எதிரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரி சில நாட்களுக்கு முன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான பரபரப்பு அடங்கும் முன்பே அடுத்த சிக்கலில் சிக்கியுள்ளார் மைத்திரி.

மைத்திரியின் திறமையற்ற நிர்வாகமே அவருக்கு எதிராக மாறியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

# கொழும்பில் நடைபெற்ற சர்வதேச குத்ஸ் தினம்









(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் கவுன்சில் ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் சர்வதேச குத்ஸ் தினம் கடந்த 04 ம் திகதி கொழும்பு 7 ல் உள்ள லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் கவுன்சிலின் தலைவர் என். எம். அமீன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிரிசா டெல்காஸ் கலந்து கொண்டார் பிரதான உரையை ஜனாதிபதி சட்டத்தரனி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஈரான் தூதுவர் எம்.எம். சுகையிர் நிகழ்த்தினார்கள். அத்துடன் பாராளுமன்ற உறுப்பிணர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், திலான் பெரேரா, சென்தோமஸ் வண.அருட்சகோதர் லயனல் பீரிஸ், மற்றும் களுப்பானபியரத்தின தேரர் ஆகியோர்களும் உரையாற்றினார்கள்.

இந் நிகழ்வு பலஸ்தீன நாடு முற்றுமுழுதாக சுதந்திரம் அடைதல், அந்த நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படல் வேண்டும். இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை போன்ற நாடுகளும் அமைப்புக்களும் முன்வந்து வழக்கு தாக்குதல் செய்தல் வேண்டும். உலக நாடுகள் இஸ்ரேல் உற்பத்தி மற்றும் அவர்களை முற்று முழுதாக வேறுபடுத்துதல். அவர்கள் செயற்பாடுகளுக்கு கண்டனக் குரல் சர்வதேச மட்டத்தில் எழுப்புதல். உலகில் இருந்து அவர்களை வேறுபடுத்தல் வேண்டும். அத்துடன் இஸ்ரேல் ஆதரவாக இருக்கும் நாடுகளுக்கு எதிராகவும் கண்டனக் குரல் எழுப்பல் வேண்டும்.

பலஸ்தீன் நாட்டினை ஜக்கிய நாடுகள் அமைப்பு உறுப்புரிமை நடாக்கி அந் நாட்டினை மீள கட்டியெழுப்புதல் வேண்டும். இதுவரை 40 ஆயிரத்திற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கடந்த 6 மாதத்திற்குள் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்களது சொத்து உடைமைகள் அழிக்கப்பட்டடுள்ள அவற்றினை மீள கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு தலைப்புக்களில் மேற்சொன்ன பேச்சாளர்கள் உரையாற்றினார்கள் அத்துடன் முஸ்லிம் கவுன்சில் தீர்மாணம்மொன்றையும் வாசித்து வருகை தந்திருந்த அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டு உரிய நாடுகளுக்கும் ஜக்கிய நாடுகள் அமையத்திற்கும் அனுப்புவதாக ஏகமனதாக தீர்மாணிக்கப்பட்டது.




## எந்தத்..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எந்தத் தேர்தலிலும் வெல்லாது என்று பல ஆய்வுகள் கூறுகின்றன.

இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் அரசு தடுமாறுகிறது.எப்படி வெல்லலாம் என்று திட்டம் தீட்டுகிறது. எப்படித்தான் திட்டம் தீட்டினாலும் அடுத்து ஆட்சி பீடம் ஏறப்போவது ஜேவிபிதான் என்பதில் சந்தேகமில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## இரண்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முறுகல் நிலை தோன்றியுள்ளது. அந்த முறுகல் மேலும் நீடிக்காமல் தடுக்குப்பதற்காகவே இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்தும் யோசனை ஒன்றை ஜனாதிபதியிடம் முன்வைக்க மொட்டு எம்பிக்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மஹிந்த ராஜபக்ஸ,பசில் ராஜபக்ச மற்றும் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

அவர்கள் அனுமதி வழங்கினால் மாத்திரமே இந்த யோசனை ஜனாதிபதியிடம் முன்வைக்கப்படும் என்று மொட்டு கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.





# இனவாத அரசியலை துடைத்தெறிவோம்

இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய காலத்தில்–கட்டாயத்தில் நாம் எல்லோரும் உள்ளோம்.அதேபோல்,இனவாத அரசியலை செய்கிறவர்களையும் இனவாத அரசியலுக்கு முகவராக செயற்படுகிறவர்களையும் முற்றாக ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

இனவாத அரசியலால் நாடு எப்படி சீரழியும்–மக்கள் இனவேறுபாடின்றி எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதை நாம் கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் கண்டோம்.

கோத்தாவின் இனவாத அரசியலுக்கு முக்கிய முகவராக இருந்தவர்தான் ஞானசார தேரர்.அவருக்கு–அவர் செய்த வேலைக்கு இப்போதைக்கு கிடைத்திருக்கும் கூலி என்னவென்பதை நாம் அறிவோம்.

இந்த நாட்டு அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்துபோயுள்ளபோதிலும் நீதித் துறைமீது நம்பிக்கை இழக்கவில்லை.அதற்கு சிறந்த உதாரணம்தான் பொது பல சேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இஸ்லாத்தை அவனமாப்படுத்தியதற்காக அவருக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது முஸ்லிம்களின் மனதைக் குளிரச் செய்துள்ளது.ரமழான் மாத பரிசாக அமைந்துள்ளது.

போர் முடிந்ததன் பின்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் தலைதூக்கியது.2013 அளவில் ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டத்தை பொது பல சேனா ஆரம்பித்ததன் மூலம் அந்த அமைப்பு பிரபல்யமானதோடு முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதமும் தலைதூக்கியது.

அந்த ஹலால் எதிர்ப்பு அவ்வளவு தூரம் அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்காதபோதிலும்,பேரினவாதம் அதனூடாக சிங்கள் மக்களுக்குள் நன்றாகவே ஊடுருவியது.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயாவுக்கு எதிராகவும் புர்காவுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தனர்.

முஸ்லிம்களின் வர்த்தகத்தை–வர்த்தக நிலையங்களை புறக்கணிக்குமாறு பிரசாரம் செய்தனர்.அதனைத் தொடர்ந்து அழுத்கம ,தர்ஹா நகர் போன்ற இடங்களில் கலவரங்களை ஏற்படுத்தி முஸ்லிம்களின் சொத்துக்களை–வீடுகளை–வர்த்தக நிலையங்களை முற்றாக அழித்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் அழுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக கூட்டம் ஒன்றை பொதுபல சேனா நடத்தியது.அதில் உரையாற்றிய ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கு எதிராகப் பேசி அங்கு நின்ற சிங்கள இளைஞர்களின் உணர்வைத் தூண்டினார்.

அதனைத் தொடர்ந்துதான் முஸ்லிம்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலை பொது பல சேனாதான் முன் நின்று நடத்தியது என்பதை எல்லோரும் அறிவர்.

அத்தோடு அவர்களின் வெறி அடங்கவில்லை.அவர்களின் பிரசாரங்களை நாடு பூராகவும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இத்தனைக்கும் பின்புலத்தில் ராஜபக்ஸ சகோதரர்களின் அரசியல் இலாபம்தான் இருந்தது.

கோத்தாவை ஜனாதிபதியாக்கு வதற்கான தூர நோக்கு கொண்ட திட்டம் அதிலிருந்தது.

அதுபோக,அன்றை மஹிந்தவின் அரசை தூக்கி நிறுத்துவதே பொது பல சேனாவின் நோக்கமாக இருந்தது.

போர் வெற்றியைத் தொடர்ந்து 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மஹிந்த அரசு பலமாக இருந்தது.

ஆனால்,அவர்களின் ஆட்சி ஊழல், மோசடி நிறைந்ததாக இருந்ததால் சிங்கள மக்கள் அந்த அரசுக்கு எதிராக மாறத் தொடங்கினர்.அவர்கள் மாறுவதைத் தடுப்பதற்காகவே பொது பல சேனா கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

இருந்தும்,2015 தேர்தலில் அந்த இனவாத பிரசாரம் எடுபடவில்லை.மஹிந்த தோல்வியடைந்தார்.

இருந்தாலும்,அவர்கள் பொது பல சேனா ஊடான முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத பிரசாரத்தைக் கைவிடவில்லை.

2019இல் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதும் பொது பல சேனா வீறுகொண்டு எழுந்தது.முஸ்லிம்களுக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டு அவர்களின் இலக்கான கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் திட்டத்தில் வெற்றிகொண்டனர்.

ஆனால், அவர்களின் சதி இரண்டு வருடங்களில் முடிவுக்கு வந்தது. கோத்தாவை ஜனாதிபதியாக்கிய மக்களே அவரை விரட்டியடித்தனர். கேவலப்படுத்தினர்.

அந்தக் காலப்பகுதியில் பொது பல சேனா அவர்களால் இயலுமானவரை இஸ்லாத்தைக் கேவலப்படுத்தினர். இறைவனை விமர்சித்தனர்.

ஆனால், இவர்களின் இனவாதம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. தேவைப்பட்டால் ஞானசார மீண்டும் பயன்படுத்தப்படுவார்.

மதவாதத்தை–இனவாதத்தைத் தூண்டுபவர்கள் இவ்வாறு தண்டிக்கப்படும்போதுதான் நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும். இனவாதத்தை முற்றாக ஒழிக்க முடியும்.

> போர் முடிந்ததன் பின்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் தலைதூக்கியது. 2013 அளவில் ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டத்தை பொது பல சேனா ஆரம்பித்ததன் மூலம் அந்த அமைப்பு பிரபல்யமானதோடு முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதமும் தலைதூக்கியது.



# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்



IATA

**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com






47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

IATA



# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்




**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - 0777141151
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - 0777151156

# பின்னூரியா
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**
#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

# பழையதை மறக்காதீர்கள்





மொட்டு கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் ஒன்று கடந்த வாரம் பத்ரமுல்லையில் உள்ள அதன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதற்குத் தலைமை தாங்கிய பசில் ராஜபக்ச அதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உயர்த்திப் பேசினார்.

“சிலருக்கு பலசெல்லாம் மறந்துட்டு.நம்மால எயார்போட்ட கடக்க எழாத நிலையெல்லாம் இருந்துச்சு.அந்த நிலம எல்லாத்தயும் மாத்தினது இந்த மனிசன் ரணில்தான்.அதையெல்லாம் மறக்கக்கூடாது. மொட்டு கட்சிட ஜனாதிபதி வேட்பாளர் இப்படித்தான் இருக்கணும் எண்டு சில விதிமுறைகள் இருக்கு.அதன்படிதான் வேட்பாளர நிறுத்துவோம்.” என்று கூறினார்.

## துப்பறிவாளன்



# வாங்கிக் கட்டிய உதயங்க

கூட்டம் முடிந்து வெளியே வந்துகொண்டிருந்தார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.அப்போது எதிரே வந்தார் முன்னாள் ரஷ்ய தூதுவரும் மஹிந்தவின் ஒன்றுவிட்ட சகோதரருமான உதயங்க வீரதுங்க.

உதயங்க பல இடங்களில் பிரசன்னவை விமர்சித்துத் திரிந்தார்.அதற்கு எங்குமே பதில் வழங்காத பிரசன்ன அதற்கான சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

இப்போது வசமாக மாட்டிக்கொண்டார் உதயங்க.

““ இந்தா இவர்தான் மஹிந்த சேர நாசமாக்குற.மைக்க கண்டா உளறி தள்ளுறதுதான்.““ என்று அருகில் நின்ற எம்பிக்களிடம் கூறினார் பிரசன்ன.

““ நாங்க மொட்டு கட்சிய உருவாக்ககுல இவன் இங்க இல்ல.மிக் விமான கொடுக்கல்–வாங்கல் பிரச்சினையால ஒளிஞ்சுக்கிட்டு இருந்துட்டு நாங்க மொட்டு கட்சிய உருவாக்கிய புறவுதான் வெளிய வந்த.அவரு எங்களுக்கு அரசியல் பாடம் எடுக்காரு ““ என்று எனக் கழற்றினார் பிரசன்ன.

““ மன்னிச்சிடுங்க சேர் ““ என்று பிரசன்னவிடம் கூறினார் உதயங்க.

““ நீ மன்னிப்பு கேக்கணும் எனக்கிட்ட இல்ல.மஹிந்த சேர் கிட்ட.உண்ட பேச்சாள அந்த மனுசனுக்கு வெளிய தல காட்ட ஏலாம இருக்கு.நீ மொட்டு கட்சில கையடிக்க வராத..““ என்று கடும் தொனியில் கூறினார் பிரசன்ன.

பிரச்சினை பெரிதாகப் போய்விடும் என்று தெரிந்த இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரனவீர “ வாங்க சேர் போவம் ““ என்று கூறி பிரசன்னவின் கையைப் பிடித்து இழுத்தார்.

“உன்ன மாதிரி கள்ளனுக்கு இங்க இடமில்ல.““ என்று கூறிக்கொண்டு வாகனத்தில் ஏறினார் பிரசன்ன.

# நாமல் துபாய் போனதால்...



சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணைமீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் இடம்பெற்றபோது நாமல் ராஜபக்ச அதில் கலந்துகொள்ளவில்லை.

வாக்கெடுப்பு முடிந்ததும் மொட்டு எம்பிக்கள் சிலர் ஜோன்சன் பெர்னாண்டோ எம்பியை சூழ்ந்துகொண்டு ஏன் நாமல் வாக்களிக்க வரவில்லை என்று அவரிடம் வினவினர்.

ஜோன்சனுக்கும் அதுபற்றித் தெரியாததால் அங்கிருந்தே நாமலுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து அவுட் ஸ்பீக்கரில் போட்டார் ஜோன்சன்.

தான் அவசரமாக துபாய் வந்துவிட்டதாகவும் அதுபற்றி சபாநாயகரிடம் சொல்லிவிட்டே துபாய் வந்ததாகவும் நாமல் கூறினார்.

# கோத்தாவுக்கு நடந்ததே எனக்கும்...!!!

பசில் ராஜபக்ச அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியதும் அதிகமானவர்கள் நினைத்தார்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் திட்டத்துடன்தான் அவர் வந்திருக்கிறார் என்று.

மொட்டு கட்சியில் உள்ள அவரது விசுவாசிகளும் அப்படியே நினைத்தனர். ஆனால், அவரது திட்டமோ ரணிலை வேட்பாளராகப் போடுவதுதான்.

அவர் வந்தவுடன் இதைச் சொன்னதும் அவரது விசிவாசிகளுக்கு கடும் கவலை. பசிலை சந்தித்து அவரது நிலைப்பாட்டை மாற்றுமாறு கூறினர்.

கோத்தாவுக்கு நடந்தது எனக்கும் நடக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா என்று மாறி அவர்களிடம் கேட்டார் பசில்.

புரியவில்லை என்றார்கள் அவர்கள். அதற்கு விளக்கமாகக் கூறினார் பசில்.

“இந்தத் தேர்தலில நம்ம தோக்கப் போறது நிச்சயம்.தோக்கப் போற தேர்தலில கேக்குறதுக்காக என்ட அமெரிக்கன் சிட்டிசன்ஷிப்ப கைவிடணுமா ? அப்படி கைவிட்டதால கோத்தாட நிலமைய பாத்திங்களா ..குடும்பம் எல்லாம் அங்க.இப்ப குடும்பத்துக்கிட்ட போக ஏலாம கஷ்டப்படுறாரு.அந்த நிலம எனக்கும் வரணுமா.கடைசில ஒருத்தரும் இல்லாம தனியா கிடந்து சாக வேண்டியதுதான் ..““ என்றார் பசில்.

அதற்கு மேல் எதுவும் பேசவில்லை அவர்கள்.



# கட்சிகளுக்கு புது நோய்

வரப்போவது ஜனாதிபதி தேர்தலோ –நாடாளுமன்றத் தேர்தலோ.எதற்கும் தயாராகவே இருக்கின்றன அரசியல் கட்சிகள்.

பிரதான அரசியல் கட்சிகள் எப்போதோ பிரசாரங்களைத் தொடங்கிவிட்டன.இந்த நிலையில்தான் வரப்போகின்ற தேர்தலில் ஜேவிபிக்குத்தான் வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் என்ற ஆய்வுகள் வெளியாகி பல கட்சிகளின் தூக்கத்தைக் கலைத்துள்ளன.

இந்த ஆய்வுகளை அடிப்படையாக வைத்து மிதப்பு வாக்குகள் எல்லாம் ஜேவிபி பக்கம் சாய்ந்துவிடும் என்ற அச்சம் காரணமாக ஏனைய கட்சிகளும் அவர்களுக்கு சார்பான வகையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று அறிய முடிகிறது.

அந்தந்தக் கட்சிகளுக்கே வெற்றி வாய்ப்புகள் இருப்பதாகக் மக்களுக்கு பொய்யாகக் காட்டும் வகையிலேயே அந்த ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளன.

அதற்காக ஆய்வுகளை நடத்தும் நிறுவனங்களுடன் கட்சிகள் பேச்சு நடத்தி வருகின்றனவாம்.

எப்புடி வேல.......



# சஜித்தை வளைக்க ரணில் போட்ட பிளான்

எங்கு பார்த்தாலும் அனுரகுமார திஸ ாநாயக்க பற்றிய பேச்சுதான்.அப்படி பேச்சு அடிபடுவதற்குக் காரணம் ரணில் விக்ரமசிங்கதானாம்.

ஐக்கிய மக்கள் சக்தியை ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைத்தால்தான் ரணிலால் வெல்ல முடியும் என்ற நிலை இருப்பதால் அந்தக் கட்சியை இணைப்பதற்காக ரணில் திட்டம் ஒன்றைப் போட்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்.


ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள ஆதரவான 10எம்பிக்களை வைத்துத்தான் இந்த வேலையைச் செய்கிறார் ரணில்.

அந்தத் திட்டம் என்னவென்றால், ஜேவிபிதான் ஐக்கிய மக்கள் சக்தியை விட முன்னிலையில் உள்ளது.நாம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தால் மாத்திரம்தான் வெல்ல முடியும்.இல்லாவிட்டால் ஜேவிபி இலகுவாக வென்றுவிடும் என்று அடிக்கடி சஜித்திடம் கூறி அவரது மனதை மாற்றுவதுதான் அந்தத் திட்டம்.

அதை அந்த 10 பேரும் கச்சிதமாக செய்து வருகிறார்களாம்.

# ஆட்டம் காணும் மஹிந்தவின் அரசியல் எதிர்காலம்

**தொடர் - 01**



சின்னத்தம்பி குருபரன்



நமது நாட்டில் 2015 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பல செய்திகளையும், படிப்பினைகளையும் நமக்கு பறைசாற்றிச் சென்றிருக்கின்றன.

நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நடப்பதுமில்லை. கணிப்புகள் யாவும் நடந்தேறுவதுமில்லை.

வெற்றியும் நிரந்தரமல்ல, தோல்வியும் நிரந்தரமல்ல. இப்போது இருக்கின்ற சூழலும் வெளிப்படுத்தி நடைமுறையில் செயற்படுத்திக்காட்டும்போது அவர் நீடித்து நிலைத்து வாழுந்தலைவராகின்றார்.

அவ்வாறு இல்லாத தலைவர்கள் மாற்றத்தின் போது தோல்வி என்ற வெள்ளத்தில் அடிபட்டுச் செல்பவர்களாகக் காணப்படுவர்.

ஒரு தலைவரிடத்தில் பதவி, புகழ், அதிகாரம், செல்வாக்கு, ஆசை, அகங்காரம் ஆகியன

இதனால் இடைநிலைக்கல்வியில் சிறிது காலம் பாடசாலை வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

பின்னர் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்து சட்டக்கல்லூரி சென்று சட்ட வல்லுனராக ஆகும்போதே அரசியலிலும் நுழைந்துகொண்டார்.. ராஜபக்ஷ குடும்பத்தில் நீண்ட கால அனுபவம் பெற்ற அரசியல்வாதியாகத் திகழ்ந்திருக் கின்றார். இத்தகைய பின்னணியும், ஆள்பலமும் "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்ற உணர்வும் அவரை நேரான பாதையில் இருந்து விலத்திச் செல்ல வழிவகுத்தது. மகிந்தவின் அரசியல் வாழ்க்கையில் 2005க்கு முன்னர் சிறுபான்மையினர் தொடர்பான பாராளுமன்றக் கலந்துரையாடல்களிலும், மந்திரி சபைக் கலந்துரையாடல்களிலும், பொது நிகழ்வுகளிலும் ஒதுங்கியிருந்தவராகவே காணப்பட்டிருக்கின்றார்.

சிறுபான்மையினரின் தேசியம், தனித்துவம் என்பவற்றிலும் அவர்களின் உரிமை, அபிலாசைகள், என்பவற்றில் பொதுவாக அக்கறை அற்றவராகவே காணப்பட்டிருக்கின்றார்.

பேச்சளவில் இதனை வலியுறுத்தினாலும் அடிப்படையில் உணர்வுரீதியாக அதனைப் புரிந்து எச்சந்தர்ப்பத்திலும் செயற்பட்டவரல்லர்.

இந்த உள்ளார்ந்த சிந்தனையே ஏழாவது ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வெற்றிக்குச் சிறுபான்மையினர் வாக்குகள் தேவையில்லை பெரும்பான்மையினரின்

கால கொடிய யுத்தத்தின் இறுதி விளைவுகள் இவருடைய ஆட்சிக்காலத்திலே அறுவடை செய்யப்பட்டன.

யுத்தத்தை முடித்து வைப்பதற்கு அவர் சேர்ந்த கூட்டணியும், எடுத்த தீர்மானங்களும், பணிப்புரைகளும், கட்டளைகளும், கூறிய கருத்துக்களும் சிறுபான்மையினரை எவ்வாறெல்லாம் பாதித்தது அவர்களின் உயிர் உடமைகளை காவுகொண்டது.

முற்றுப் பெறாத அகதி வாழ்க்கை ஆடு, மாடுகளை அடைத்து வைப்பதைப் போலான இடைத்தங்கல் முகாங்கள், இறுதி யுத்தத்தில் பயன்படுத்திய பயங்கர ஆயுதங்கள் அதனால் ஏற்பட்ட அழிவுகள், சரணடைந்தவர்களை சித்திரவதை செய்து கொலை செய்தமை, ஒப்படைப்பின்போதும் முகாம்களில் இருந்தும் அகதிகளாக வெளியேறி

எதிர்காலத்தில் நமக்குரியதல்ல என்பதை தோல்வியுற்ற இராச்சியங்களும், சர்வதிகார ஆட்சிகளும் தோல்வியுற்ற உலகத் தலைவர்களின் வாழ்க்கையும் எமக்குக் கற்றுத் தந்துள்ளன.

இவை ஒவ்வொன்றும் மாற்றம் ஒன்றுதான் நிரந்தரம்; என்பதை உணர்த்தும் செய்திதனைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

ஒரு தலைவரிடத்தில் (அது குடும்பத்தலைவராக இருக்கட்டும், நிறுவனத்தலைவராக இருக்கட்டும், அரசியல் தலைவராக இருக்கட்டும்) சமுக நலன், சமுகத்தின்மீது கொண்ட மரியாதை, சமுகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு, அவர்களை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்வதற்கான எதிர் காலத் திட்டமிடல், அன்பு, கருணை, காருண்யம், பொதுவுடமைச் சிந்தனை என்பன இருக்கும் போதும் அவற்றைச் சொல், செயல், சிந்தனை என்பவற்றினூடாக ஒருமித்திருக்குமாயின் அத்தலைவர் தோல்விக்கு வித்திடுபவராக அமைகின்றார்.

அந்தவகையில்தான் 50 வருடத்திற்கு மேற்பட்ட அரசியல் அனுபவத்தையும், சட்ட நுணுக்கங்களையும், பாராளுமன்றம், மந்திரிசபை அனுபவங்களையும் கொண்டராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைகின்றார்.

பிரபல அரசியல்வாதியான டி .ஏ .ராஜபக்ஷயின் மகனான இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வி வாழ்க்கையில் தற்றுணிவு உள்ளவராகவும், தான் எடுத்த கருமத்தைத் துணிந்து நிறைவேற்றுபவராகவும் எத்தகைய சவால்களுக்கும் முகம்கொடுத்து வெற்றி கொண்டவராகவும் காணப்பட்டிருக்கின்றார்.





வாக்குகள் மாத்திரம் என் வெற்றியை உறுதி செய்யும் என்ற கருத்தியலுக்கு அவரை இட்டுச் சென்றது.

2005இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஐந்தாவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இருந்து செயற்பட்ட விதத்தையும் அவர் கூறிய கருத்துக்களையும், அவர் பின்பற்றிய கொள்கைகளையும் நன்று கூர்ந்து ஆய்வு செய்பவர்களுக்கு இந்த உண்மை புலப்படும்.

இதற்குக் காரணம் தம் அரசியல் வாழ்க்கையில் சிறுபான்மையினர் விவகாரங்களில் விலத்தியிருக்கும் போக்கினைக கடைப்பிடித்தமை ஆகும்.

நான் ஏற்கனவே கூறியதுபோல் பதவி, புகழ், அதிகாரம், செல்வாக்கு, அகங்காரம், ஆசை, ஆள்பலம் என்பவற்றோடு சகோதரங்களின் பக்க பலமும் அவரை தன்நிலை உணர்ந்து செயற்படாத ஒருவராகவும் மாற்றம் ஒன்றுதான் நிரந்தரம் அந்த மாற்றத்தின்போது தோல்வியும் நிகழலாம் என்று சிந்தித்துச் செயலாற்றுகின்ற பக்குவத்தையும் அவரிடமிருந்து அகற்றி விட்டிருந்தது.

இருபத்தாறு வருட வரும்போது கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களின் தொடர் கதைகளும், ஆடு, மாடுகளை வாகனங்களில் ஏற்றி வந்து திட்டமிடப்படாது இறக்கிவிடுவதுபோலான மீள்குடியமர்த்தல்களும், அவர்களைத் தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பினூடான துன்புறுத்தல்களும், மீள்கைதுகளும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படாமையும், யுத்த வடுக்களிலிருந்து விடுபடுவதற்கான ஆற்றுப்படுத்தல் ஏற்பாடுகள் செய்யப்படாமையும், இராணுவ மயமாக்கமும், நிர்வாகத்தில் இராணுவத்தலையீடும், எங்கும் எதிலும் இராணுவம் நுழையலாம், தகவல் திரட்டலாம் என்ற பிற்போக்கான சிந்தனையும், உயர் பாதுகாப்பு வலயங்களும், விரிபுபடுத்த காணி அபகரிப்பும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கான காணிப்பத்திரங்களும், கலாசாரச் சீரழிவுகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஒரு மேடைப் பேச்சில் பதவி, புகழ், அதிகாரம், அகங்காரம், சகோதர பலம், சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் தாலாட்டு ஆகியவற்றினால் இறுமாப்புக் கொண்டு "இலங்கையில் சிறுபான்மையினர் என்றொரு இனமே இல்லை" எனக் கூறுமளவுக்கு இட்டுச் சென்றது.

**(தொடரும்)**

# பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் மக்கள் வங்கி



சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் வங்கித் துறையில் முன்னணி நிறுவனமான மக்கள் வங்கி, நல்விளைவு மிக்க முயற்சிகள் மூலம் பெண்களுக்கு வலுவூட்டலுக்கான தனது அர்ப்பணிப்பைப் பெருமையுடன் அறிவித்துள்ளது.

Good Market உடனான மூலோபாய ஒத்துழைப்புடன், மக்கள் வங்கி அண்மையில் கொழும்பு 05 இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண் தொழில்முயற்சியாளருக்கான விசேட பயிற்சி நிகழ்வை நடத்தியது.

இந்த முயற்சியின் கீழ், மேல் மாகாணத்தைச் சேர்ந்த 30 பங்கேற்பாளர்கள் கொண்ட குழுவில் இருந்து 12 தொழில்முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

Good Market நிறுவனத்தின் இணை ஸ்தாபகர் அச்சலா சமரதிவாகரவினால் பயிற்சி நடத்தப்பட்டது.

புழுழன ஆயசமநவ இன் தரத் தேவைகளுடன் அந்தந்த தொழில் முயற்சிகளை சீரமைப்பதில் கவனம் செலுத்தி, அந்த வணிகங்களுக்கு உறுதியான அத்திவாரத்தை உறுதி செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

சமூக தொழில்முயற்சியாண்மை, நெறிமுறை வழுவாத நடைமுறைகள் மற்றும் நிலைபேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றில் சமூகத்தை ஆதரிக்கும் Good Market, இலங்கை தொழில்முயற்சியாளர்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து செயல்பட்டுவருகிறது.

# Clogard Pro Clean பற்தூரிகை அறிமுகம்

வாய்ச் சுகாதார பராமரிப்பில் நம்பகமான பெயராக விளங்கும் க்ளோகார்ட், தனது சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்பான - Clogard Pro Clean Toothbrush பற்தூரிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது.




க்ளோகார்ட் பற்தூரிகை குடும்பத்தில் புதிதாக இணையும் இந்த புதிய உயர் ரக தூ ரிகையின் இணைவானது, வாய்ச் சுகாதார பராமரிப்பில் Hemas Consumer Brands புரட்சியை ஏற்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. Pro Clean Toothbrush ஆனது, வாய்ச் சுகாதாரத்தில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

தனது போட்டியாளர்களை விட அதிகமான அம்சங்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இது, மேம்பட்ட பல் துலக்கும் அனுபவத்தை மீள்வரையறை செய்யும் அம்சங்களை அறிமுகப்படுத்துகிறது.

Pro Clean Toothbrush இன் தனித்துவமான அம்சம் யாதெனில் அதிலுள்ள பிரத்தியேகமான Power Tip (சிறிய வளைந்த முனை) ஆகும்.

இது முழுமையான மற்றும் பயனுள்ள பல் துலக்கும் அனுபவத்தை வழங்கும் வகையில், வாயில் இலகுவில் அடைய முடியாத பகுதிகளை அடைந்து, தூய்மைப்படுத்துவதற்கு உதவுகிறது.

# கொழும்பு துறைமுக நகரின் நிதிக் காட்சிக்கு அனுமதி பெற்ற வங்கியாக HNB




HNB PLC, கொழும்பு துறைமுக நகர சிறப்புப் பொருளாதார வலயத்திற்குள் (SEZ) செயற்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நபராக (AP) உரிமம் பெற்ற முதல் வங்கிகளில் ஒன்றாக மாறியது.

நிபுணத்துவத்துடன் திட்டமிடப்பட்ட ஸ்மார்ட் சிட்டி என்ற விடயங்களுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மாதிரி நகரம்தான் கொழும்பு துறைம நகரம்.

மிக உயர்ந்த தரத்தில் வர்த்தக, வாழ்க்கை முறை மற்றும் குடியிருப்பு வாய்ப்புகளை வழங்கும் பிராந்தியத்தின் நவீன சேவை மத்திய நிலையமாகவும் எதிர்காலத்தின் நிதி மையமாகவும் இந்த நகரம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

தீவு வாழ்க்கை, சென்ட்ரல் பார்க் வாழ்க்கை, மரினா, சர்வதேச தீவு மற்றும் நிதி மாவட்டம் என ஐந்து தனித்துவமான பகுதிகளுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் மத்திய வணிக மாவட்டத்தின் நிலப்பரப்பான 269 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்பையும், 6.4 மில்லியன் சதுர மீட்டர் மொத்த கட்டப்பட்ட பரப்பையும் கொழும்பு துறைம நகரம் கொண்டுள்ளது.

# V30 கையடக்கத் தொலைபேசி வெளியீடு




உலகளாவிய முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான vivo, அதன் vivo V30 கையடக்கத் தொலைபேசியை வெளியிட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட Aura Light Portrait அம்சம் மற்றும் அதன் ஸ்டைலான V தொடரின் உயர் ரக வடிவமைப்புடன் அதன் சிறந்த உயர் வகை தயாரிப்பாக இது அமைகிறது.

புதிய ஏ30 ஆனது, உயர் ரக வடிவமைப்பைக் காண்பிக்கும் வகையில், ஒருங்கிணைந்த 120 Hz 3D வளைந்த திரையை கொண்டுள்ளதோடு, பயனர்களின் தனித்துவமான ஸ்டைல்களை பிரதிபலிக்கும் வகையில் சிறந்த புதிய வண்ண தெரிவுகளில் இது அமைக்கப்பட்டுள்ளது.

vivo Sri Lanka பிரதம நிறைவேற்று அதிகாரி Kevin Jiang இது பற்றித் தெரிவிக்கையில், "V தொடர் எப்பொழுதும் ஒளியியல் மற்றும் எளிமையான அழகியலுக்கு பெயர் பெற்றதாக காணப்படுகின்றது.

இது vivo வின் புத்தாக்கமான கண்டுபிடிப்புகள் மூலம் Portrait புகைப்படம் எடுத்தல் மற்றும் வடிவமைப்பு ஆகிய இரண்டையும் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

சவாலான குறைந்த வெளிச்சம் கொண்ட இரவு நிலைகளிலும் கூட, பயனர்களுக்கு பிரமிக்க வைக்கும் Portrait புகைப்படங்களை எளிதாகப் பிடிக்க உதவும் சக்திவாய்ந்த கருவியை வழங்க நாம் Aura Light Portrait அம்சத்தை மேம்படுத்தியுள்ளோம்." என்றார்.

# பழைய நகைகளை கவர்ச்சிபொங்கும் புதிய நகைகளாக மாற்றிக்கொள்ளுங்கள்



வோக் ஜுவல்லர்ஸ் இப்புத்தாண்டில் வழங்கும் பல்வகைப்பட்ட பிரத்தியேக சலுகைகள் மூலமாக, உங்களுடைய பழைய நகைகளுக்கு பதிலாக, காலத்தால் அழியாது, உங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நினைவுகளைத் தோற்றுவிக்கும் நகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

2024 மார்ச் 18 முதல் ஏப்ரல் 11 வரை இடம்பெறுகின்ற கொள்வனவு ஸ்ரீ விற்பனை (Buying = Selling Promotion) என்ற ஊக்குவிப்புச் சலுகையின் மூலமாக, எவ்விதமான செய்கூலியும் இல்லாமல், தங்கத்தின் விலைக்கே 22 கரட் காப்பு மற்றும் சங்கிலி அடங்கிய தொகுப்பை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சலுகை இடம்பெறும் காலப்பகுதியில் வைரங்கள் மற்றும் விலைமதிப்பற்ற கற்களுக்கு 50மூ என்ற நேரடி விலைத்தள்ளுபடியையும் நீங்கள் பெற்றுப் பயனடைய முடியும்.

உங்களுடைய பழைய வைர நகைகள் சலித்துப்போய் விட்டால், நவீன வடிவமைப்புக்கள் மற்றும் போக்குகளுக்கு ஏற்ப, வோக் ஜுவல்லர்ஸ் வழங்கும் புதிய மற்றும் கவர்ச்சியான நகைகளாக அவற்றை இலகுவாக மாற்றிக்கொள்ளுங்கள்.

இவற்றுக்குப் புறம்பாக, 2024 ஏப்ரல் 15 முதல் 30 வரை ரூபா 500,000ஃ- க்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவை மேற்கொள்கின்ற வோக் ஜுவல்லர்ஸ் வாடிக்கையாளர்கள் அனைவரும் 1 கிராம் தங்க நாணயத்தை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்வர். இந்த ஒப்பற்ற புத்தாண்டுச் சலுகைகளின் பயன்களை அனுபவிக்க எந்தவொரு வோக் ஜுவல்லர்ஸ் காட்சியறைக்கும் விஜயம் செய்யுங்கள்.

# YAMALUBE Lubricants தற்போது AMWஇடம்



இலங்கையின் வாகனத் துறையில் முன்னணியில் உள்ள Associated Motorways (Private) Limited (AMW) நிறுவனமானது, ஜப்பானின் Yamaha Motor Co. Ltd. (YMC) இன் அங்கீகரிக்கப்பட்ட முகவரும், இலங்கையில் Yamalube Lubricants இன் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகவும் உள்ளது.

Yamalube Lubricants குறிப்பாக Yamaha தயாரிப்புகளுக்காக, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் ஆகும்.

செயற்றிறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த Yamaha மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தயாரிப்புகளின் தனித்துவமான தேவைகளை ஆழமாகப் அறிந்து, மிகவும் திறமையான Yamaha பொறியியலாளர்களால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

சிறந்த எண்ணெய் தக்கவைப்பை Yamalube கொண்டுள்ளது. அதாவது தேய்மானம் மற்றும் பாதிப்பைத் தடுக்க மிகவும் கடினமான சூழல்களிலும் இது மிகவும் பாதுகாப்பான மசகு அடுக்கைப் பராமரிக்கிறது.

இத்தயாரிப்புகள் யாவும் American Petroleum Institute (API) மற்றும் National Marine Manufacturers Association (NMMA) ஆகியவற்றின் தொழில்துறை தரங்களையும் பூர்த்தி செய்கின்றன.




# பெண்களுக்கு She-roes போட்டி

பிரிட்டிஷ் கவுன்சில், Child Fund ஸ்ரீலங்காவுடன் இணைந்து உள்ளூர் இலங்கைப் பெண்களின் சாதனைகளைக் கொண்டாடும் முகமாக ஒரு உற்சாகமான போட்டியை சமீபத்தில் நடத்தி முடித்தது.

She-roes போட்டியானது, இலங்கைப் பெண் முன்மாதிரிகளின் சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதோடு, அவர்களது சமூகங்களில் உள்ள குறிப்பிடத்தக்க பெண்களை பாராட்டி ஊக்கவிக்கிறது.

பெண்கள் கல்விக்கான ஆங்கிலம் மற்றும் டிஜிட்டல் (EDGE) திட்டம், சக குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்த முன்மாதிரிப் போட்டி அதன் கழக உறுப்பினர்களுக்கு உத்வேகமாக அமைந்ததுடன் அவர்களை கனவு காணவும் மேலும் உயரத்திற்கு உயரவும் தூண்டியது.

இதன் பரிசளிப்பு விழா 22 மார்ச் 2024 அன்று கொழும்பில் உள்ள டவர் ஹால் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு இலங்கை முழுவதிலும் உள்ள EDGE கழக உறுப்பினர்களின் திறமைகள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தியது.

மேலும் உள்ளூர் முன்மாதிரிப் பெண்களின் சாதனைகள் மற்றும் அவர்களின் சமூகங்களில் அவர்கள் ஏற்படுத்தும் மிகப்பெரிய தாக்கத்தையும் அங்கீகரித்தது. இலங்கையின் முதல் பார்வை குறைபாடுடைய ஆடை வடிவமைப்பாளர் எனப் புகழப்படும் நயனா ஆஷ்சார்யா இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.




# தீவா வெற்றியாளர்கள் கௌரவிப்பு

தீவா (DIVA), "தீவா கரத்திற்கு வலிமை" தொழில்முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வில் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களுக்கு 2024 பெப்ரவரி 28 அன்று காலியில் விருது வழங்கி கௌரவித்தது.

Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது.

மிகக் கவனமான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றின் பின்னரே குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச் சிறந்து விளங்கிய நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் முகங்கொடுத்துவரும் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடும் தொழில்முனைவோர், நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி நாட்டை பொருளாதார வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் சக்தியாக உருவெடுத்துள்ளனர்.

எமது இல்லத்தரசிகளும் தமது வீட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியவாறே தொழில்முனைவோர்களாக உருமாறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதிலும் முக்கியமாக தையல், பின்னல், சமையற் கலை போன்ற தமது வழக்கமான வேலைகளைத் தாண்டி நாட்டின் தொழிற்படையின் முக்கிய அங்கமாகவும் தேசிய பொருளாதாரத்தை வழிநடத்திச் செல்லும் சக்தியாகவும் பெண் தொழில் முனைவோர் மாறியிருப்பது போற்றுதற்குரியது.

# Colombo Fashion Week க்கு உத்தியோகபூர்வ சமூக ஊடக ஒத்துழைப்பு வழங்கும் TikTok







Colombo Fashion Week (CFW) உடன் அதன் உத்தியோகபூர்வ சமூக ஊடக பங்காளியாக ஒத்துழைப்பதன் மூலம் இலங்கையின் மாற்றமடைந்து வரும் நவநாகரீக நிலப்பரப்பில் தனது முதல் Eioit TikTok மேற்கொண்டுள்ளது.

இந்த கூட்டாண்மை வுமைவுழம மற்றும் CFW ஆகிய இரண்டிற்கும் ஒரு மைல்கல்லாகும், ஏனெனில் அவர்கள் சூகுயளாழைவெழம மூலம் உள்ளூர் நவநாகரீக துறையில் படைப்பாற்றல், பன்முகத்தன்மை மற்றும் புத்தாக்கங்களைக் கொண்டாடுவதற்கு இணைந்துள்ளனர்.

இந்த மார்ச் மாதம், கொழும்பில் உள்ள மூன்று பரபரப்பான இடங்களில், CFW அதன் 21வது பதிப்பிற்கு நவநாகரீக ஆர்வலர்களை வரவேற்றது.

இது உள்ளூர் மற்றும் சர்வதேச வடிவமைப்பாளர்களின் விதிவிலக்கான வேலைப்பாடுகளைக் காட்சிப்படுத்தியது. வுமைவுழம இன் ஆதரவுடன், இந்த நிகழ்வு புதிய உச்சத்தை எட்டியது, பங்கேற்பாளர்களுக்கும் Online பார்வையாளர்களுக்கும் முன் எப்போதும் இல்லாத வகையில் சிறந்த அனுபவத்தை வழங்கியது.

இந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, TikTok, நிகழ்வு நடைபெறும் இடங்களில் மூலோபாயமாக வைக்கப்பட்டுள்ள ஞசு குறியீட்டை அறிமுகப்படுத்தியது.



# பாடசாலைகளில் ஆறு புதிய நூலகங்கள்

செலான் வங்கி தனது 36வது ஆண்டு நிறைவையொட்டி தனது செலான் பகசர திட்டம் ஊடாக மற்றொரு மைல்கல்லை எட்டிக் கொண்டாடியது.

மார்ச் 25, 2024 அன்று, இலங்கை முழுவதும் உதவி தேவைப்படும் பாடசாலைகளில் ஆறு புதிய நூலகங்களை வங்கி திறந்து வைத்தது.இது இளைய சமுதாயத்தை ஊக்குவிப்பதிலும் கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க படி ஆகும்.

இந்தப் புதிதாக திறக்கப்பட்ட நூலகங்கள் மொறட்டுவையில் மொரட்டு மகா வித்தியாலயம், சாவகச்சேரியில் உள்ள யாழ்ஃமீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, தலுவகொடுவவில் உள்ள புனித அன்னம்மாள் மகா வித்தியாலயம், காத்தான்குடியில் அமைந்துள்ள அமீன் மகா வித்தியாலயம், நாரம்மலயில் உள்ள தம்பதெனிய மத்திய கல்லூரி மற்றும் கண்டியில் உள்ள ஸ்ரீ சந்திரானந்த பௌத்த பெண்கள் பாடசாலை ஆகியவை ஆகும். இந்த விரிவாக்கத்துடன், மொத்த நூலகங்களின் எண்ணிக்கை 231 ஆக உயர்கிறது.

# Manu Mehewara திட்டத்தின் கீழ் கிராமப்புற சமூகங்களுக்கு P&Sஇன் சுத்தமான நீர்



இலங்கையின் மிகப் பெரிய மற்றும் மிகவும் புகழ்பெற்ற விரைவு சேவை உணவகச் சங்கிலியான Perera & Sons Bakers (Private) Limited (P&S), கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான மற்றொரு ஊக்கமளிக்கும் திட்டத்தை நிறைவு செய்துள்ளது.

இலங்கையர்களை மகிழ்விக்கும் அதன் 120 வருட பாரம்பரியத்தையும், பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கான உறுதியான அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கும் வகையில், இம்முறை P&S ஆனது குருநாகல் மாவட்டத்தில் உள்ள பஹல கொங்கடவல, வீரபொகுண கிராமத்தின் கிராமப்புற சமூகத்திற்கு உதவிக் கரம் நீட்டியுள்ளது.

இதன் விளைவாக, கிராம மக்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், இலங்கை கடற்படையுடன் இணைந்து, அதிநவீன ரிவர்ஸ் ஒஸ்மோசிஸ் (RO) ஆலையை நிறுவியுள்ளது.

தினமும் சுமார் 1,000 கிராம மக்களுக்கு சேவை செய்து வரும் இந்த RO ஆலை தற்போது சமூகத்தின் அன்றாட நல்வாழ்வை மேம்படுத்தும் ஒரு சின்ன நம்பிக்கையாக உள்ளது.

P&S ஆல் வழிநடத்தப்படும் இந்தத் திட்டமானது இலங்கையின் கிராமப்புறங்களில் சுத்தமான தண்ணீருக்கான அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.



# பாடசாலைகளில் ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வு

ஜோன் கீல்ஸ்அறக்கட்டளை (ஜே. கே.எஃப்), ஸ்கேலிங் அப் நியூட்ரிஷன் பீப்பள்ஸ் போஃரம் (சன் பிஎஃப்) உடன் இணைந்து, ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி இடங்களான கொழும்பு 02 மற்றும் ஜா-எலவில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து பாடசாலைகளை இலக்கு வைத்து நடைபெற்று வரும் பாடசாலை ஊட்டச்சத்து திட்டத்தின் ஒரு பகுதியாக, ஊட்டச்சத்து விழிப்புணர்வு அமர்வுகளை வெற்றிகரமாக தொடங்கியது.

இந்த திட்டம் ஊட்டச்சத்து விழிப்புணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் முன்னர் செயல்படுத்தப்பட்ட பாடசாலை உணவுத் திட்டத்தை முழுமையாக்கும் வகையில் பாடசாலை தோட்டக்கலை போன்ற நிலையான நடைமுறைகளை மேம்படுத்துகிறது.

2023 டிசம்பரில் கொழும்பு 2 இல் இரண்டு பாடசாலைகளில் இடம்பெற்ற அமர்வு பலதரப்பட்ட பயனாளிகள் நல்ல வரவேற்பை பெற்றதைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கொழும்பு 2 இல் உள்ள இரண்டு பாடசாலைகளிலும், 2024 பெப்ரவரி 16 முதல் 27 வரையான காலப்பகுதியில் ஜா-எலவில் உள்ள ஐந்து பாடசாலைகளிலும், விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன. இதுவரை 1,211 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்.

# கண் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம்



இலங்கையின் அதிவிசாலமான கண்பார்வை, செவிப்புலன் மற்றும் கண்ணாடித் தீர்வுகள் வழங்குனரான விஷன் கெயார், தமது "விஷன் கெயார் முதற்கட்ட கண் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தின்" ஆரம்பம் மற்றும் "விஷன் கெயார் கண் பரிசோதனை மற்றும் அறிவூட்டல் உபகரணத் தொகுதியினது" அறிமுகத்தோடு உலக கண் பரிசோதனை வாரத்தை நினைவு கூர்ந்தது.

இந்த நாடளாவிய ரீதியிலான முன்னெடுப்பானது பாடசாலை வயது சிறுவர்கள் அத்துடன் தனியார் மற்றும் அரசாங்க அமைப்புகள் மத்தியில் கண் சுகாதார விழிப்புணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை, கண்களின் ஆரோக்கியத்தை ஊக்குவிப்பதற்கு அவசியமான கருவிகளை வழங்கி சமூகங்களை வலுவூட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக கண் பரிசோதனை வாரத்தின் கருப்பொருளான "உலகளாவிய கண் பராமரிப்புக்கான கண் பரிசோதனைத் துறையின் ஈடுபாட்டை மேம்படுத்தல்" என்பதற்கு இணங்கியதாக இந்த முன்னெடுப்பானது அனைவரும் அணுகக்கூடிய, நியாயமான கண் பராமரிப்பு என்ற விஷன் கெயாரின் அர்ப்பணிப்புக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

# Pearsonஇன் PTE Core அறிமுகம்

கல்விச் சேவைகளில் சர்வதேச பெருநிறுவனமான Pearson, இலங்கையில் PTE Core இனை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கானவர்கள், குறிப்பாக இளம் வயதினர் தொழில்வாய்ப்புக்களைத் தேடியும், சிறந்த வாய்ப்புக்களை நாடியும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதில் கவனம் செலுத்தியுள்ளனர்.

2022 ஆம் ஆண்டின் முடிவில் 300,000 க்கும் மேற்பட்டவர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதுடன், அவர்களில் பலரும் முறைசார் தொழில் தகைமை உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நபர்கள் தங்களுடைய குடும்பங்களுக்காக உழைக்கும் வழிகளைத் தேடுகின்றார்கள். எனினும், புலம்பெயர்கின்றவர்கள் முகங்கொடுக்கின்ற ஒரு முக்கியமான தடையாக ஆங்கில மொழி தேர்ச்சி மதிப்பீடு காணப்படுவதுடன், கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பல பிரபலமான நாடுகளுக்கு புலம்பெயர்வதற்கு இது மிகவும் முக்கியமான ஒரு தேவைப்பாடாக உள்ளது.

இதன் பின்னணியில், Pearson இன் ஆங்கில பரீட்சைகளுக்கான PTE தொகுதியானது இந்த இளைஞர்களும்,யுவதிகளும் வெளிநாடுகளில் தமது கனவுகளை நனவாக்குவதற்கு உதவுகின்றது.



# சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடிய HNB FINANCE




HNB FINANCE PLC, 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை கடந்த மார்ச் 8ம் திகதி, தனது சக பெண் பணியாளர்களை மதித்து பாராட்டும் வகையில் ஒரு நிகழ்வினை "பெண்களின் வளர்ச்சியில் முதலீடு செய்து முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்" (Invest in Women. Accelerate Progress) என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்தது.

இவ் நிகழ்வானது நிறுவனத்தின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய கிளைகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஏராளமான பெண் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இவ் நிகழ்வினை மேலும் சிறப்பிக்கும் வகையில், இலங்கை மற்றும் லெபனானில் உள்ள தொலைக்காட்சி தொகுப்பாளினியும், முன்னணி பேஷன் மொடலும், சர்வதேச அழகுப் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதிபடுத்தும் திருமதி ஸ்டெபானி சிறிவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திருமதி ஸ்டெபானி சிறிவர்தன அவர்கள், வாடிக்கையாளர்களை கையாளும் ஆளுமை, பொதுத் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் தொடர்பான கருத்துரை அங்கிருந்த அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததுடன், இவ் அமர்வு 5 முக்கிய விடயங்களான நல்ல மன ஆரோக்கியம், தன்னம்பிக்கையை வளர்ப்பது, நேர்மறை மற்றும் உணர்திறன் நுண்ணறிவு, தகவல் தொடர்பு திறன் அதன் நெறிமுறைகள் மற்றும் சமூக நடத்தை ஆகியவை வளர்க்கும் வகையில் கருத்திற்கொண்டு நடத்தப்பட்டது.